**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.73/2024
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : சித்ராதேவி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of September 2024.

04.09.2024

(எதிரி ஆஜ இல்லை. எதிரி சார்பில் Sec.355 of BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். கடந்த 04.12.2023ம் தேதி மாலை 05.00 மணியளவில் எனது தந்தை கணேசன் எனக்கு போன் செய்து பொக்கனாரேந்தலிருந்து பொன்னங்கரை செல்லும் சாலையில் செல்வராஜ் பம்புசெட் அருகில் எனது மகன் தனசீலன் விபத்து ஏற்பட்டு மயங்கி கிடப்பதாக எனது தந்தை கணேசனுக்கு பாலைய்யா என்பவர் போன் செய்து கூறியதாக எனது தந்தை என்னிடம் கூறினார். உடனே நான் சம்பவயிடத்திற்கு வந்தபோது எனது மகன் இடது முழங்காலுக்கு கீழே சதையே இல்லாமல் இருந்த நிலையில் மயங்கி கீழே கிடந்தான்.

**2)** உடனே 108 ஆம்புலன்சுக்கு போன் செய்து எனது மகனை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கிருந்து மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சேர்த்தோம். 06.12.2023ம் தேதி சிகிச்சை பலனின்றி என் மகன் இறந்துவிட்டார். நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்தபோது தேரிருவேலி போலிசார் வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கிச்சென்றார்கள்.

என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கற்றிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்றதன் பெயரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.73/2024
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : பாலைய்யா | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of September 2024.

04.09.2024

(எதிரி ஆஜ இல்லை. எதிரி சார்பில் Sec.355 of BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். சென்ற வருடம் தேதி, மாதம் நினைவில் இல்லை உலையூலிருந்து நானும், மாணிக்கமும் எங்களது ஊரான பொன்னங்னேரிக்கு இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தோம். மாலை 05.00 மணியளவில் செல்வராஜ் கேணி அருகே டிராக்டர் நின்றுகொண்டிருந்தது. எதிரி தேவதாஸ் என்பவர் தனசீலனை தூக்கி வைத்துக்கொண்டிருந்தார். உடனே நாங்கள் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு பார்க்கும்போது தனசீலன் மீது டிராக்டர் மோதி இடது காலில் காயம் ஏற்பட்டது தெரியவந்தது. விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று நான் நேரடியாகப் பார்க்கவில்லை.

**2)** உடனே நான் தனசீலனின் தாத்தாவிற்கு போன் செய்து நடந்த சம்பவத்தை கூறினேன். உடனே 108 ஆம்புலன்ஸ் மூலமாக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்து, அங்கிருந்து மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சேர்த்தார்கள். சிகிச்சை பலனின்றி தனசீலன் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கற்றிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்றதன் பெயரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.73/2024
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : மாணிக்கம் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of September 2024.

04.09.2024

(எதிரி ஆஜ இல்லை. எதிரி சார்பில் Sec.355 of BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். 04.12.2023ம் தேதி உலையூலிருந்து மாலை 05.00 மணியளவில் நானும், பாலைய்யாவும் எங்களது ஊரான பொன்னங்னேரிக்கு இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தோம். எங்களுக்கு முன்பாக 100 மீட்டர் தூரத்தில் பள்ளி மாணவர்கள் மிதிவண்டியில் சென்று கொண்டிருந்தாக்ள். எங்களுக்கு எதிரில் டிராக்டர் சல்லி கற்கள் ஏற்றிக்கொண்டு வந்த வாகனம் நின்றது. நாங்கள் அருகில் சென்று பார்த்தபோது டிராக்டர் டிரைவர் வாகனத்தை விட்டு இறங்கி கணேசன் பேரனை தூக்கிக்கொண்டிருந்தார்.

**2)** நாங்கள் அருகில் இருந்த மாணவரிடம் கேட்டபோது டிராக்டர் அவன் மீது ஏறி இறங்கியதாக கூறினார்கள். விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று நான் நேரடியாகப் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கற்றிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்றதன் பெயரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.73/2024
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : இம்மானுவேல் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of September 2024.

04.09.2024

(எதிரி ஆஜ இல்லை. எதிரி சார்பில் Sec.355 of BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். 05.12.2023ம் தேதி தேரிருவேலி போலிசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்தார்கள் அதில் சாட்சியாக நானும், பெரியஇலை கிராத்தை சேர்ந்த செல்லத்துரையும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசர் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கற்றிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்றதன் பெயரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.